Kerala Gazette No. 37 dated 21st September 1971.

PART I **Section iii**

கேரள அரசு

சட்டத் துறை

விளம்பரம்

எண்: 14106-எச் 2/70/சட்டம்.

1970 நவம்பர் 30

திருவனந்தபுரம்,

1892 அக்ரஹாயணம் 9

கேரள சட்டப்பேரவையின் பின்வரும் சட்டம் பொதுத்தகவலுக்கென இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டசபையால் நிறைவேற்றப்பட்டவாறான மசோதாவுக்கு, 1970 நவம்பர் 29-ம் நாளன்று மாநிலத்தலைவரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றது.

மாநிலத் தலைவரின் ஆணைப்படி,
பி. வி. இராமச்சந்திரன்,
சட்டத்துறைச் செயலாளர்.

The Agricultural Income-tax (Amendment) Act, 1970.

1970-ன் 16-வது சட்டம்

1970-ன் விவசாய வருமான வரி (திருத்த) சட்டம்

1950-ன் விவசாய வருமானவரிச் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கான ஒரு சட்டம்.

முகவுரை.—இதன் பின்னர் வரும் நோக்கங்களின் பொருட்டு, 1950-ன் விவசாய வருமானவரி சட்டத்தினை மேலும் திருத்துவது உசிதமாகையால், இந்தியக் குடியரசின் இருபத்தொன்றாம் வருடம் இது பின்வருமாறு சட்டமாக்கப்படட்டும்.

1. சுருக்கத்தலைப்பு மற்றும் ஆரம்பம்.—(1) இச்சட்டம், 1970-ன் விவசாய வருமான வரி (திருத்த) சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) பிரிவுகள் 2, 3, 5, 6 மற்றும் 7, 1970 ஏப்ரல் முதல் நாள் அமலுக்கு வந்ததாகக் கருதப்படவேண்டும். பிரிவு 4, 1958 ஏப்ரல் முதல் நாள் அமலுக்கு வந்ததாகக் கருதப்படவேண்டும். மற்றும் மீதியுள்ள பிரிவுகள் உடனடி அமலுக்கு வரும்.

2. <u>பிரிவு 2-ன் திருத்தம்.</u>—(இதன் பின்னர் முதற் சட்டமெனக் குறிப்பிடப்படும்) 1950-ன் விவசாய வருமானவரிச் சட்டத்தின் (1950-ன் XXII) பிரிவு 2-ல்,—

(i) உட்பிரிவு (எச்)க்குப்பதில் பின்வரும் உட்பிரிவுகள் சேர்க்கப்படவேண்டும், அவையாவன.—

(எச்) "கம்பெனி" எனில் ஒரு உள்நாட்டுக்கம்பெனி அல்லது ஒரு வெளிநாட்டுக்கம்பெனி என்று பொருட்படும்;

(எச் எச்) "உள்நாட்டுக்கம்பெனி" எனில், 1956-ன் கம்பெனிகள் சட்டத்தின் (1956-ன் 1-வது மத்தியச் சட்டம்) கீழ் நிறுவப்பட்டதும் பதிவு செய்யப்பட்டதுமான ஒரு கம்பெனி என்று பொருட்படுவதுடன், இந்தியாவில் ஏதேனும் பாகத்தில் முன் அமலில் இருந்த கம்பெனிகள் சம்பந்தப்பட்ட ஏதேனும் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டதும் பதிவு செய்யப்பட்டதுமான ஒரு கம்பெனியும் உட்படும்;

எனினும் அந்த கம்பெனியின் பதிவு செய்த அலுவலகம் இந்தியாவில் இருக்க வேண்டும்; ";

(ii) உட்பிரிவு (கெ கெ), உட்பிரிவு (கெ கெ கெ) என்று மறு எழுத்திடப்படவேண்டும் மற்றும் அவ்வாறு மறு எழுத்திடப்பட்ட உட்பிரிவு (கெ கெ கெ) க்கு முன்னால் கீழ் வரும் உட்பிரிவு சேர்க்கப்படவேண்டும். அதாவது.—

" (கெ கெ) "வெளிநாட்டுக்கம்பெனி" எனில் 1956-ன் கம்பெனிகள் சட்டத்தின் (1956-ன் 1-வது மத்தியச் சட்டம்) பிரிவு 591-ல் பொருள் கொள்ளப்பட்டவாறான ஒரு வெளிநாட்டுக் கம்பெனி என்றும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அரசாங்கம் பொதுவான அல்லது தனி ஆணைப்படி ஒரு சங்கமாகச் சேர்க்கப்பட்டதோ அல்லாததோவாயினும், வெளிநாட்டுக் கம்பெனி என்று அறிவித்துள்ள ஒரு வெளிநாட்டுச் சங்கமும் உட்படும் ; "

3. <u>பிரிவு 3-ன் திருத்தம்.</u>—முதற் சட்டத்தின் பிரிவு 3-ல், துணைப்பிரிவு (3)-ல் "ஆறுயிரம் ரூபாய்" எனும் சொற்கள் வரும் இருவிடங்களிலும் அவற்றிற்கு பதிலாக "ஏழாயிரம் ரூபாய்" எனும் சொற்கள் சேர்க்கப்படவேண்டும்.

4. <u>பிரிவு 35-ன் திருத்தம்.</u>—முதற் சட்டத்தின் பிரிவு 35-ன் துணைப்பிரிவு (3)-ல் இரண்டாவதுகாப்பு வாசகத்திற்குப் பதில் பின்வரும் காப்பு வாசகம் சேர்க்கப்படவேண்டும், அதாவது.—

"எனினும் மேலும், ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுகிற அல்லது ஏதேனும் ஆணை வரிமதிப்பீடு அல்லது மறு மதிப்பீடு செய்யப்படவேண்டிய காலத்திற்கு வரையறை செய்வது, இப்பிரிவில் அடங்கியுள்ள ஒன்றும்—

(எ) பிரிவு 19-ன் கீழ் உண்டுபண்ணப்பட்ட ஒரு மறுமதிப்பீட்டிற்கோ;

அல்லது

(பி) (i) பிரிவு 31 அல்லது பிரிவு 32 அல்லது பிரிவு 34 அல்லது பிரிவு 50-ன் கீழ் ஏதேனும் ஆணையில் அடங்கியுள்ள ஏதேனும் தீர்ப்பு; அல்லது கட்டளையில் அல்லது

(ii) ஏதேனும் நீதிமன்றத்தின் ஒரு ஆணை அல்லது தீர்மானத்தின் பயனாக அல்லது தொடர்பாக உண்டுபண்ணப்பட்ட ஒரு வரி மதிப்பீடு அல்லது மறு மதிப்பீட்டிற்கோ—

பொருந்தாது."

5. <u>பிரிவு 56-ன் திருத்தம்.</u>—முதற் சட்டத்தின் பிரிவு 56-ல்,—

(i) முதலாம் பத்தியில் "கம்பெனி" எனும் சொல் விட்டுவிடப்பட வேண்டும்;

(ii) இரண்டாவது காப்பு வாசகத்தில் "கம்பெனி அல்லாத" எனும் சொற்கள் விட்டுவிடப்படவேண்டும்;

(iii) பின்வரும் விளக்கம் இறுதியில் சேர்க்கப்படவேண்டும்; அதாவது "<u>விளக்கம்.</u>—சந்தேகங்களை நீக்கும் பொருட்டு, ஒரு கம்பெனியின் மொத்த விவசாய வருமானம் சம்பந்தமாக ஒரு மேல்வரியும் விதிக்கப்படக்கூடாது என்று இதனால் அறிவிக்கப்படுகிறது."

6. <u>பிரிவு 57-ன் திருத்தம்.</u>—முதற் சட்டத்தின் பிரிவு 57-ல் "கம்பெனி" எனும் சொல் விட்டுவிடப்படவேண்டும்.

7. <u>அட்டவணையின் திருத்தம்.</u>—முதற் சட்டத்தின் அட்டவணையில் (i) பாகம் I-க்குப் பதில் பின்வருவன சேர்க்கப்படவேண்டும், அவையாவன.—

"<u>பாகம் I</u>

<u>(பிரிவு 3 பார்க்கவும்)</u>

<u>(விவசாய வருமானவரி நிரக்குகள்)</u>

(1) கம்பெனி அல்லாத ஒரு நபரின் காரியத்தில்—

எ. மொத்த விவசாய வருமானம் பதினாயிரம் ரூபாய்க்கு மிகைப்படா திருக்குமிடத்து—

1.	மொத்த விவசாய வருமானம் 7,500 ரூபாய்க்கு மிகைப்படாதிருக்குமிடத்து	நிரக்கு. ரூ. 175
2.	மொத்த விவசாய வருமானம் 7,500 ரூபாய்க்கு மிகைப்பட்டு ஆனால் 10,000 ரூபாய்க்கு மிகைப்படாதிருக்குமிடத்து	ரூ. 400

பி. மொத்த விவசாய வருமானம் பதினாயிரம் ரூபாய்க்கு மிகைப்படுமிடத்து — நிரக்கு

1.	மொத்த விவசாய வருமானத்தின்	முதல் 2,000	ரூபாய்மீது	இல்லை
2.	,,	,, அடுத்த 3,500	ரூபாய்க்கு	ஐந்து பைசா
3.	,,	,, 5,000	பதினொன்று	,,
4.	,,	,, 5,000	பதினெட்டு	,,
5.	,,	,, எஞ்சிய தொகையின்மீது	இருபத்தைந்து	,,

எனினும், ஏழாயிரம் ரூபாய்க்குக் குறைவான மொத்த விவசாய வருமானத்தின் மீது விவசாய வருமானவரி செலுத்தப்பட வேண்டியதில்லை.

மேற்சொன்ன காப்பு வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறை, முந்திய வருட இறுதியில் பாகப் பிரிவினையாகும்போது, ஒரு பாகத்திற்கு உரிமை கோருவதற்கு உரிமையுடைய ஐந்து உறுப்பினர்களேனும் உள்ளனர் எனும் நிபந்தனைக்கிணங்கவுள்ள ஒவ்வொரு பாகமாகாத இந்துக் குடும்பத்தின் காரியத்திலும், ஏழாயிரம் ரூபாயாகவிருக்கும்.

என்றிருப்பினும், செலுத்தப்படவேண்டிய விவசாய வருமான வரி, எக்காரியத்திலும், அதது காரியத்திலாவதுபோல், மூவாயிரம் ரூபாய்க்கோ ஏழாயிரம் ரூபாய்க்கோ மிகையாகவுள்ள மொத்த விவசாய வருமானத்தின் நேர் பாதி தொகைக்கு அதிகமாகக்கூடாது.

(2) ஒரு உள்நாட்டுக் கம்பெனியின் காரியத்தில்,—

(ஏ)	மொத்த விவசாய வருமானம் ரூ. 25,000-க்கு மிகையாகாதிருக்குமிடத்து	மொத்த விவசாய வருமானத்தின் 45 சதமானம்
(பி)	மொத்த விவசாய வருமானம் ரூ. 25,000-க்கு கூடுதலாக ஆனால் 1 லட்சத்திற்கு மிகையாகாதிருக்குமிடத்து	மொத்த விவசாய வருமானத்தின் 50 சதமானம்

எனினும் செலுத்தப்படவேண்டிய விவசாய வருமானவரி—

(ஏ) கம்பெனியின் மொத்த விவசாய வருமானம் ரூ. 25,000 ஆக இருந்திருக்குமாயின் அதனால் செலுத்தப்படவேண்டியதிருக்கும் விவசாய வருமான வரியின் மொத்தத் தொகையைவிடவும்;

(பி) மொத்த விவசாய வருமானம் 25,000 ரூபாய்க்கு மிகையாகும் போது தொகையின் 80 சதமானத்திற்கும் மிகைப்பட்டிருக்கக்கூடாது.

(ஸி)	மொத்த விவசாய வருமானம் ரூ. 1 லட்சத்திற்கு மிகையாக, ஆனால், ரூ. 3 லட்சத்திற்கு மிகையாகாதிருக்குமிடத்து	மொத்த விவசாய வருமானத்தின் 55 சதமானம்

எனினும் செலுத்தப்படவேண்டிய விவசாய வருமானவரி—

(ஏ) கம்பெனியின் மொத்த விவசாய வருமானம் ரூ. 1 லட்சமாக இருந்திருக்குமாயின் கம்பெனியால் செலுத்தப்படவேண்டியிருந்திருக்கும் விவசாய வருமான வரியின் மொத்தத் தொகையைவிடவும்;

(பி) மொத்த விவசாய வருமானம் ரூ. 1 லட்சத்திற்கு மிகையாகும் போது தொகையின் 80 சதமானத்திற்கும் மிகைப்பட்டிருக்கக்கூடாது.

(டி)	மொத்த விவசாய வருமானம் ரூ. 3 லட்சத்திற்கு மிகையாக, ஆனால் 10 லட்சத்திற்கு மிகைப் படாதிருக்குமிடத்து.	மொத்த விவசாய வருமானத்தின் 60 சதமானம்

எனினும் செலுத்தப்படவேண்டிய விவசாய வருமான வரி—

(ஏ) கம்பெனியின் மொத்த விவசாய வருமானம் ரூ. 3 லட்சமாக இருந்திருக்குமாயின், கம்பெனியால் செலுத்தப்படவேண்டியதாகவுள்ள விவசாய வருமான வரியின் மொத்தத் தொகையைவிடவும்;

(பி) மொத்த விவசாய வருமானம் 3 லட்சத்திற்கு மிகையாகும்போது தொகையின் 80 சதமானத்திற்கும் மிகைப்பட்டிருக்கக்கூடாது.

(இ)	மொத்த விவசாய வருமானம் ரூ. 10 லட்சத்திற்கு மிகையாகும்போது	மொத்த விவசாய வருமானத்தின் 65 சதமானம்

எனினும் செலுத்தப்படவேண்டிய விவசாய வருமானவரி—

(ஏ) கம்பெனியின் மொத்த விவசாய வருமானம் ரூ. 10 லட்சமாக இருந்திருக்குமாயின் கம்பெனியால் செலுத்தப்படவேண்டியிருந்திருக்கும் விவசாய வருமானவரியின் மொத்தத் தொகையைவிடவும்;

(பி) மொத்த விவசாய வருமானம் 10 லட்சத்திற்கு மிகையாகும்போது தொகையின் 80 சதமானத்திற்கும் மிகைப்பட்டிருக்கக்கூடாது.

3. "ஒரு வெளிநாட்டுக் கம்பெனியின் காரியத்தில், மொத்த விவசாய வருமானத்தில் 75 சதமானம்;"

(ii) பாகம் II-ல்,—

(ஏ) ஏ பத்தியில், "பி பத்தி பொருந்ாத ஒரு காரியத்தில்" எனும் சொற்கள் விட்டுவிடப்படவேண்டும்;

(பி) பி பத்தி விட்டுவிடப்படவேண்டும்.

8. <u>ஒழுங்கு செய்தல்</u>.—(1) ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது பிற அதிகாரத் தாபனத்தின் ஏதேனும் தீர்ப்பு, தீர்ப்புச்சுருக்கம் அல்லது ஆணை எவ்வாறிருப்பினும், 1970 ஏப்ரல் 21-ம் தாளுக்கு முன்னர் முதத் சட்டத்தின் பிரிவு 35-ன் கீழ் உண்டுபண்ணப்பட்ட அல்லது உண்டுபண்ணப்பட்டதாகச் சொல்லப்பட்ட விவசாய வருமானத்தின் ஏதேனும் வரி மதிப்பீடு அல்லது மறு

மதிப்பீடு, இச்சட்டத்தினால் திருத்தப்பட்ட மேற்சொன்ன பிரிவின்கீழ் உண்டு பண்ணப்பட்ட அத்தகைய வரி மதிப்பீட்டினை அல்லது மறு மதிப்பீட்டினைப் போன்று, ஒழுங்கும் பயனும் உள்ளதாகக் கருதப்படவேண்டும், மற்றும்

அவ்வாறே—

(ஏ) அந்த வரி மதிப்பீடு அல்லது மறு மதிப்பீடு சம்பந்தமாக ஏதேனும் அலுவல் அல்லது அதிகாரத்தாபனத்தால் செய்யப்பட்டதோ, மேற்கொள்ளப் பட்டதோவான எல்லாச் செயல்முறைகள், நடைமுறைகள் அல்லது காரியங்கள், அனைத்து நோக்கங்களை முன்னிட்டும், சட்டத்திற்கு இணங்க செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டும்.

(பி) அந்த வரி மதிப்பீடு அல்லது மறு மதிப்பீடு சம்பந்தமாச் சுமத்தப் பட்ட அல்லது வசூலிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்டதாகவோ வசூலிக்கப்பட் டதாகவோ கருதப்பட்ட விவசாய வருமானத்தின் மீதான எல்லா வரிகளும் சட்டப்படி சுமத்தப்பட்டதாக அல்லது வசூலிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும்.

(ஸி) அவ்வாறு வசூலிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வரியைத் திரும் பத்தருமாறு ஏதேனும் நீதிமன்றத்தில், நடுவர் நீதிமன்றத்தில் அல்லது மற்று அதிகாரத் தாபனத்தில் ஒரு வழக்கோ அல்லது செயல் முறையோ நடத்தவோ தொடரவோ கூடாது.

(டி) அவ்வாறு வசூல் செய்யப்பட்ட வரியைத் திரும்பக் கொடுக்குமாறு தாக்கீது அளிக்கும் எந்தத் தீர்ப்புச்சுருக்கம் அல்லது ஆணையையும் ஒரு நீதி மன்றமும் நிறைவேற்றக்கூடாது.

(இ) 1970 ஏப்ரல் 27-ம் தேதிக்குமுன்னர் அத்தகைய வரி மதிப்பீடு அல்லது மறு மதிப்பீட்டின் விளைவாகச் சுமத்தப்பட்ட, ஆனால் அந்தத் தேதிக்கு முன்னர் வசூலிக்கப்படாதான அத்தகைய ஏதேனும்வரி, இச்சட்டத்தினால் திருத் தப்பட்டவாறான முதற் சட்டத்தின் மற்றும் அதன்கீழ் உண்டுபண்ணப்பட்ட விதிகளின்கீழ் வகை செய்யப்பட்டுள்ள முறையில், வசூல் செய்யப்படலாம்.

(எப்) அத்தகைய வரி மதிப்பீடு அல்லது மறு மதிப்பீட்டின் விளைவாக 1970 ஏப்ரல் 27-ம் தேதிக்கு முன்னர் அத்தகைய ஒரு வரியும் சுமத்தப்படாதிருக்குமிடத்து அத்தகைய வரி, இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதற் சட்டத்தின் அல்லது அதன்கீழ் உண்டுபண்ணப்பட்ட விதிகளின் கீழ், சுமத்தப் படவும் வசூலிக்கப்படவும் செய்யலாம்.

எனினும் அந்தச் சட்டத்தின் ஏற்பாட்டின்படி அல்லாத முதற் சட்டத்தின் கீழ் அத்தகைய செய்கை அல்லது விடுபடல் குற்றமாகாது எனில், 1970 ஏப்ரல் 27-ம் தேதிக்கு முன்னர் அவரால் செய்யப்பட்ட அல்லது விட்டுவிடப்பட்ட ஏதேனும் சம்பந்தமாக ஒரு குற்றமெனக் கருதி ஏதேனும் நபர் தண்டிக்கப்படுவ தற்கு இந்தப் பிரிவில் அடங்கியுள்ள யாதொன்றும் உரித்தானவராக்காது.

(2) சந்தேகங்களை நீக்கும் பொருட்டு, இச்சட்டத்தால் திருத்தப்பட்ட முதல் சட்டத்தின் கீழ் அவரால் கொடுக்கப்படவேண்டியதைவிடக் கூடுதலாக அவரால் செலுத்தப்பட்ட ஏதேனும் வரியைத் திருப்பி அளிக்குமாறு உரிமை கோருகின்ற ஏதேனும் நபரை, உட்பிரிவு (1)-இலுள்ள யாதொன்றும் தடை செய்வதாகக் கருதப்படக்கூடாது என்று இதனால் அறிவிக்கப்படுகிறது.

9. <u>தள்ளுபடி மற்றும் தவிர்ப்பு.</u>—(1) 1970-ன் விவசாய வருமானவரி (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம் (1970-ன் 15) இதனால் தள்ளுபடி செய்யப்படுகிறது.

(2) அத்தகைய தள்ளுபடி எவ்வாறிருப்பினும் மேற்சொல்லப்பட்ட அவசரச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் அல்லது எடுக்கப்பட்ட ஏதேனும் நடபடி அல்லது மேற்சொல்லப்பட்ட அவசரச் சட்டத்தின்மூலம் திருத்தியமைக்கப்பட்ட முதற் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் அல்லது செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிற அல்லது எடுக்கப்பட்ட ஏதேனும் நடபடி அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிற நடபடி இச்சட்டத்தின் கீழ் அல்லது இச்சட்டத்தினால் திருத்தப்பட்ட முதற் சட்டத்தின்கீழ் செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டும்.
